| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் | | |
| இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019 | | |
| தரம் : 06 | சைவநெறி<br>சுட்டெண் : ........................................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |

## பகுதி - I

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஓங்காரப் பொருளாக விளங்குபவர்
    1) சிவன் 2) விநாயகர்
    3) முருகன் 4) திருமால்

02. திருஞானசம்பந்தர் அவதரித்த ஊர்
    1) சிதம்பரம் 2) திருவாமூர்
    3) சீர்காழி 4) திருவாதவூர்

03. திருமறைக் காட்டு கதவு திறக்கப் பாடியவர்
    1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
    3) சுந்தரமூர்த்திநாயனார் 4) மாணிக்கவாசகர்

04. சுந்தரமூர்த்திநாயனார் முதற் பாடிய பதிகம்
    1) "தோடுடைய செவியன்......." 2) "கூற்றாயினவாறு......"
    3) "பித்தாபிறை சூடி......." 4) "மந்திரமாவது நீறு...."

05. மாணிக்கவாசகரது பாடல்கள் இடம்பெறும் திருமுறை
    1) 3ம் திருமுறை 2) 7ம் திருமுறை
    3) 9ம் திருமுறை 4) 8ம் திருமுறை

06. இளையான் குடிமாறனார் செய்து வந்த தொண்டு
    1) அன்னமிடல் 2) தூபமிடல்
    3) தீபமிடல் 4) திருமுறை ஓதுதல்

07. பெரியபுராணம் பாடியவர்
    1) சம்பந்தர் 2) மாணிக்கவாசகர்
    3) சேந்தனார் 4) சேக்கிழார்

08. தூலலிங்கம் எனப்படுவது
    1) கோபுரம் 2) மூலஸ்தானம்
    3) நந்தி 4) கொடிமரம்

09. சிவன் பூண்பது
    1) பாம்பு 2) திருநீறு
    3) வேதம் 4) சந்திரன்

10. பஞ்சபுராணத்தில் நான்காவதாக இடம்பெற வேண்டியது
    1) தேவாரம் 2) திருவாசகம்
    3) திருப்பல்லாண்டு 4) பெரியபுராணம்



kalvi.lk

11. சிவதரிசன பலனைத் தருபவர்
   1) விநாயகர்
   2) நந்தி
   3) சமயகுரவர்
   4) சண்டேசுவரர்

12. வைகாசி மூல நாளில் முத்தியடைந்தவர்
   1) திருஞானசம்பந்தர்
   2) சுந்தரமூர்த்திநாயனார்
   3) திருநாவுக்கரசர்
   4) மாணிக்கவாசகர்

13. திருநாவுக்கரசரின் இளமைப்பெயர்
   1) ஆரூரர்
   2) வாதவூரர்
   3) மருணீக்கியார்
   4) தருமசேனர்

14. சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த இடம்
   1) நல்லூர்
   2) மட்டக்களப்பு
   3) காரைதீவு
   4) திருநெல்வேலி

15. ஒன்பதாம் திருமுறையில் இடம்பெறுவது
   1) திருவிசைப்பா
   2) தேவாரம்
   3) புராணம்
   4) திருவாசகம்

16. நற்சிந்தனைப் பாடல்களைப் பாடியவர்
   1) ஞானப்பிரகாசர்
   2) செல்லப்பா சுவாமிகள்
   3) திருமூலர்
   4) யோகர்சுவாமிகள்

17. விரதங்களில் ஒன்று
   1) கந்தசஷ்டி
   2) காது குத்துதல்
   3) தீபாவளி
   4) தருமம்

18. ஐம்பொறிகளும் ஒன்றித்து வழிபாடாற்றும் இடம்
   1) வீடு
   2) பாடசாலை
   3) ஆலயம்
   4) கந்தோர்

19. பெண்கள் மட்டும் செய்யும் நமஸ்காரம்
   1) பஞ்சாங்க நமஸ்காரம்
   2) அட்டாங்க நமஸ்காரம்
   3) ஏகாங்க நமஸ்காரம்
   4) திரியாங்க நமஸ்காரம்

20. திருநாரையூரில் உள்ள பிள்ளையார்
   1) கற்பகப் பிள்ளையார்
   2) பொல்லாப் பிள்ளையார்
   3) மாணிக்கப்பிள்ளையார்
   4) பஞ்சமுக கணபதி

( $20 \times 2 = 40$ புள்ளிகள்)

Education கல்வி அධ்‍යාපන



kalvi.lk

## பகுதி - II

முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

**01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டை வரிக்கிரமமாக எழுதுக.**

1) "இடரினுந் தளரினும் ........"
2) "பித்தா பிறை சூடி...."
3) "பூசுவதும் வெண்ணீறு....".
4) "சீரும் திருவும் பொலிய...."

(8 × 2 = 16 புள்ளிகள்)

**02. "திருமுறைகள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை."**

1) திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
2) தேவார முதலிகளைத் தருக.
3) பஞ்சபுராணங்கள் ஓதப்படும் இடங்கள் 3 தருக.
4) பஞ்சபுராணங்கள் ஓதுவதால் கிடைக்கும் பயன்கள் 3 தருக.

(2 + 3 + 3 + 3 = 11 புள்ளிகள்)

இந்துக் கல்லூரி
நூலகம்
யாழ்ப்பாணம்.

**03. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**

1) ஆலயம் என்ற சொல்லின் பொருள் யாது?
2) "திருவைந்தெழுத்து" என்றால் என்ன?
3) ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் 5 தருக.
4) ஆலயம் செல்லும் முறையைச் சுருக்கமாகத் தருக.

(3 + 2 + 3 + 3 = 11 புள்ளிகள்)

**04. "மெய்யடியார்கள் சமய வளர்ச்சிக்கு உதவி புரிந்தனர்."**

1) சமய குரவர்கள் யாவர்?
2) திருஞானசம்பந்தருக்கு இறைவன் வழங்கிய விருதுகள் எவை?
3) மாணிக்கவாசகர் செய்த தொழில் யாது? முத்தியடைந்த தினம் எது?
4) சுந்தரர் செய்த அற்புதங்கள் 3 தருக.

(3 + 3 + 2 + 3 = 11 புள்ளிகள்)

**05. "ஞானப்பிரகாச முனிவர் போர்த்துக்கேயர் ஆட்சியில் வாழ்ந்த சமயப்பெரியார்."**

1) ஞானப்பிரகாசர் தமிழ்நாடு சென்ற காரணம் யாது?
2) இவரால் சிதம்பரத்தில் உருவாக்கப்பட்டவை எவை?
3) இவர் முனிவர் எனச் சிறப்பிக்கக் காரணம் யாது?
4) இவர் எழுதிய நூல்கள் 2 தருக.

(3 + 2 + 3 + 3 = 11 புள்ளிகள்)


kalvi.lk

06. "சமயச் செயற்பாடுகளின் ஆரம்ப இடம் வீடாகும்."

1) திருநீறு அணியும் வேளைகள் எவை?

2) நீர் சுவாமியறையில் எவ்வாறு வழிபாடாற்றுவீர்?

3) நீர் கொண்டாடும் பண்டிகைகள் 3 தருக.

4) சுவாமியறையிலுள்ள சுவாமிப் படங்கள் 3 ஐ எழுதுக.

( 2 + 3 + 3 + 3 = 11 புள்ளிகள்)

07. **"பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக."**

1) திருமுறைகள்

2) ஆலய வழிபாடு

3) இளையான் குடிமாறநாயனார்

4) விரதங்கள்

5) விநாயகர்

( $5\frac{1}{2} \times 2 = 11$ புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page